# ஒடிஸா: வருமான வரித் துறை சோதனையில் ரூ.220 கோடி ரொக்கம் பறிமுதல்


புவனேசுவரத்தில் வருமான வரித் துறையினரால் கைப்பற்றப்பட்ட ரொக்கத்தின் ஒரு பகுதி.

**புவனேசுவரம்/ராஞ்சி, டிச. 8:** ஒடிஸாவில் மதுபான உற்பத்தி நிறுவனத்துக்குத் தொடர்புடைய இடங்களில் வருமான வரித் துறை நடத்திய சோதனையில் ரூ.220 கோடி ரொக்கமாக பறிமுதல் செய்யப்பட்டது.

மேற்கு ஒடிஸாவின் புகழ் பெற்ற மதுபான உற்பத்தி நிறுவனமான 'பால்டியோ சாஹூ' குழுமத்தின் மீது வரி ஏய்ப்பு குற்றச்சாட்டு எழுந்தது.

இதைத் தொடர்ந்து, மாநிலத்தின் சாம்பல்பூர், போலன்கிர், திட்லாகர், பௌத், சுந்தர்கர், ரூர்கேலா மற்றும் புவனேசுவரம் ஆகிய பகுதிகளில் உள்ள அந்த நிறுவனத்தின் அலுவலகங்கள், அதிகாரிகளின் வீடுகள், தொழிற்சாலைகளில் வருமான வரித் துறை புதன்கிழமை தொடங்கி வெள்ளிக்கிழமை பிற்பகல் வரை 3 நாள்கள் சோதனை நடத்தியது.

போலன்கிர் மாவட்டத்தின் சுடாபடா பகுதியில் உள்ள அலுவலகத்தில் நடந்த சோதனையில் 156 பைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கணக்கில் வராத ரூ.220 கோடி ரொக்கம் வியாழக்கிழமை கைப்பற்றப்பட்டது.

வருமான வரித் துறையால் ஒடிஸாவில் கைப்பற்றப்பட்ட அதிகபட்ச தொகை இதுவாகும் எனக் கூறப்படுகிறது. வருமான வரித்துறை இயக்குநர் சஞ்சய் பஹதூர் புவனேசுவரம் வந்து சோதனையை மேற்பார்வையிட்டார். சோதனை தொடர்பாக யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

**சிபிஐ விசாரணை தேவை–பாஜக:** இந்தச் சோதனை குறித்து நிறுவனத்தின் தரப்பில் இருந்து எந்த விளக்கமும் தற்போதுவரை அளிக்கப்படவில்லை.

இந்த நிலையில், இந்தச் சோதனை குறித்து ஆளும் பிஜு ஜனதா தளம் உரிய விளக்கமளிக்க வேண்டும் எனவும் ஆளுங்கட்சியின் ஆதரவின்றி இவ்வளவு பெரிய மோசடி நடந்திருக்க வாய்ப்பில்லை என்பதால் இந்தக் குற்றச்சாட்டில் சிபிஐ விசாரணை வேண்டும் எனவும் மாநில பாஜக கோரிக்கை விடுத்தது.

# இளைஞர்கள் திடீர் மரணத்துக்கு கரோனா தடுப்பூசி காரணமல்ல

மத்திய அரசு

**புது தில்லி, டிச.8:** இளைஞர்களின் திடீர் மரணங்களுக்கு கரோனா தடுப்பூசி காரணமல்ல என்பது இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐசிஎம்ஆர்) நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டதாக மக்களவையில் மத்திய அரசு தெரிவித்தது.

'கரோனா தடுப்பூசிக்கும் திடீர் மாரடைப்பு மரணங்களுக்கும் தொடர்பிருக்க வாய்ப்புள்ளதா?' என்று மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா வெள்ளிக்கிழமை எழுத்துபூர்வமாக பதிலளித்தார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

கரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்தவர்களில் சிலர் திடீரென மரணமடைந்துள்ளனர். ஆனால், இந்த மரணங்களுக்கான காரணத்தை உறுதிசெய்ய போதிய ஆதாரங்கள் இல்லை.

கரோனா பாதிப்புக்கு பிறகு இளைஞர்கள் மத்தியில் திடீர் மாரடைப்பு மரணங்கள் அதிகரித்து வருவதாக அச்சம் எழுந்த நிலையில், இது தொடர்பாக உண்மையைக் கண்டறிய ஐசிஎம்ஆரின் தேசிய தொற்றுநோயியல் நிறுவனம் 19 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் கடந்த மே முதல் ஆகஸ்ட் வரை பன்முக ஆய்வை மேற்கொண்டது.

2021, அக்டோபர் 1 முதல் 2023, மார்ச் 31 வரையிலான காலகட்டத்தில், இணை நோய்கள் எதுவும் இல்லாமல் திடீரென மரணமடைந்த 18 முதல் 45 வயதுடைய தனிநபர்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கரோனா பாதிப்பு, தடுப்பூசி செலுத்தியது, கரோனாவுக்கு பிந்தைய உடல்நிலை, அவர்களின் குடும்பத்தில் ஏற்கெனவே திடீர் மரணம் நேரிட்டுள்ளதா? இறப்புக்கு முந்தைய 48 மணிநேரத்தில் மது அல்லது போதைப் பொருள் பயன்படுத்தப்பட்டதா? கடுமையான உடற்பயிற்சி செய்தார்களா? என பல்வேறு விவரங்களைத் திரட்டி, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் இளைஞர்களின் மத்தியில் திடீர் மரணம் நேரிடுவதற்கான அபாயத்தை கரோனா தடுப்பூசி அதிகரிக்கவில்லை என்பது கண்டறியப்பட்டது.

அதேநேரம், முன்பு கரோனாவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து, மரபு ரீதியிலான காரணம் மற்றும் குறிப்பிட்ட வாழ்க்கை முறை பழக்கங்களால் திடீர் மரணம் நேரிடும் சாத்தியக்கூறு அதிகரிக்கிறது என்று மாண்டவியா குறிப்பிட்டுள்ளார்.

# ரயில் கட்டண நிர்ணயக் குழு அமைக்கும் திட்டம் இல்லை



**புது தில்லி, டிச. 8:** ரயில் கட்டணங்களை நிர்ணயிக்க குழு அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை என மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இந்திய ரயில்வேயில் பண்டிகை காலங்களில் அடிப்படை பயணக் கட்டணம் 300 சதவீதம்வரை அதிகரிக்கப்படுவதைத் தடுக்க ரயில் கட்டண நிர்ணய குழு அமைக்கப்படுமா என திமுக எம்.பி. வில்சன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு மாநிலங்களவையில் அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்த எழுத்துபூர்வ பதிவில், பல்வேறு தரப்பிடம் இருந்து பெறப்பட்ட உள்ளீடுகளின் அடிப்படையில், பயணிகள் கட்டணத்தை நிர்ணயிப்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். தற்போதைக்கு ரயில் கட்டணத்தை நிர்ணயம் செய்வதற்கான குழுவை அமைக்கும் திட்டம் எதுவும் மத்திய அரசின் பரிசீலனையில் இல்லை.

பல்வேறு பிரிவினருக்கு பயணத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பல்வேறு வகையான ரயில் சேவைகளை இந்திய ரயில்வே செயல்படுத்தி வருகிறது. சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் மலிவுவிலையில் சேவைகளை வழங்குவதற்காக கடந்த 2019-20-ஆம் ஆண்டில் பயணிச்சீட்டுக்காக ரூ.59,837 கோடி ரயில்வே மானியமாக வழங்கியது. இது ரயில்களில் பயணிக்கும் ஒவ்வொருவருக்கும் சராசரியாக வழங்கப்பட்ட 53% சலுகையாகும். இந்த மானியம் அனைத்து வகை பயணிகளுக்கும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது' எனத் தெரிவித்தார்.

# வட்டி சமநிலை திட்டத்துக்கு கூடுதலாக ரூ.2,500 கோடி: மத்திய அமைச்சரவை ஒப்புதல்

**புது தில்லி, டிச.8:** ஏற்றுமதிக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலங்களில் ஏற்றுமதியாளர்களுக்குக் கடனளிக்கும் வட்டி சமநிலை திட்டத்துக்கு கூடுதலாக ரூ.2,500 கோடி ஒதுக்கீடு செய்து, அடுத்த ஆண்டு ஜூன் 30-ஆம் தேதி வரை நீட்டிக்க பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை வெள்ளிக்கிழமை ஒப்புதல் அளித்தது.

குறிப்பிட்ட துறைகளைச் சேர்ந்த மற்றும் எம்எஸ்எம்இ தயாரிப்புகளை ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்கள் இதன் மூலம் பயன்பெறுவர்.

கடந்த 2015, ஏப்.1-இல் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தில் குறிப்பிட்ட 410 தயாரிப்புகளை ஏற்றுமதி செய்யும் உற்பத்தியாளர்கள் மற்றும் வணிக ஏற்றுமதியாளர்களுக்கு 2 சதவீத மானியத்திலும் எம்எஸ்எம்இ ஏற்றுமதியாளர்களுக்கு 3 சதவீத மானியத்திலும் கடன் அளிக்கப்படுகிறது. தொடக்கத்தில் 2020, மார்ச் 31 வரை 5 ஆண்டுகளுக்கு இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட நிலையில், கரோனா பெருந்தொற்று காலத்தில் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டது.

இதையடுத்து, கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தொடர்ந்து நீட்டிக்கப்பட்டது.

# குஜராத்தில் ஒன்றரை ஆண்டுகள் கட்டணம் வசூலித்த போலி சுங்கச்சாவடி!



**காந்திநகர், டிச.8:** குஜராத் மாநிலத்தில் தனியார் நிலத்தில் சாலை அமைத்து போலி சுங்கச்சாவடி மூலம் மக்கள், காவல் துறை, மாவட்டத்தின் உயர் அரசு அதிகாரிகள் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக ஏமாற்றப்பட்டுள்ளனர்.

மாநிலத்தின் பாமான்போர்-கட்ச் பகுதிகளை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையில், மோர்பி மாவட்டத்தில் உள்ள வகாசியா கிராமத்தில் சுங்கச்சாவடி செயல்பட்டு வருகிறது.

இந்தச் சாலையை ஒட்டி செயல்பட்டுவந்தஒயிட்ஹவுஸ் டைல்ஸ் தொழிற்சாலை நிறுவனம் தற்போது மூடப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்துக்குச் சொந்தமான நிலத்தில், அதன் உரிமையாளர்கள் சாலையை ஏற்படுத்தி, சட்டவிரோதமாக சுங்கச் சாவடி அமைத்து கட்டண வசூலில் ஈடுபட்டு வந்தனர்.

அங்கீகரிக்கப்பட்ட வகாசியா சுங்கச் சாவடியைவிட சட்டவிரோத சுங்கச்சாவடியில் கட்டணம் பாதியாக இருந்ததால், தேசிய நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகனங்கள், தனியார் சாலையைப் பயன்படுத்தி, குறைந்த கட்டணத்தை செலுத்தி வந்துள்ளன. இந்த முறையில் சுமார் ஒன்றரை ஆண்டுக்கு ரூ.75 கோடிக்கு கட்டண வசூல் நடைபெற்றுள்ளது.

இது குறித்த தகவல் வெளியான நிலையில், காவல்துறையினர் அப்பகுதியில் சோதனை மேற்கொண்டனர். இதையடுத்து, நிறுனத்தின் உரிமையாளர்கள் அமர்ஷி படேல், வனராஜ் சிங் ஜாலா, ஹர்விஜய் சிங் ஜாலா உள்ளிட்ட 5 பேர் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது.

இது தொடர்பாக மோர்பி மாவட்ட ஆட்சியர் கூறுகையில்,'வகாசியா சுங்கச்சாவடிக்கு வரும் வாகனங்கள் நெடுஞ்சாலையிலிருந்து மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டு, சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படுவதாகத் தகவல் கிடைத்தது. காவல்துறை மற்றும் பிற துறை அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது' என்றார்.


## பாரத ஸ்டேட் வங்கி (SBI)

பரமத்திவேலூர் கிளை
எண்.316, பாண்டமங்கலம் ரோடு, பரமத்திவேலூர்
நாமக்கல் - 638 182. போன் : 04268-222611.
இ-மெயில் : sbi.11060@ sbi.co.in

**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான, விற்பனை அறிவிப்பு**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பாரத ஸ்டேட் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அதிகாரம் பெற்ற அலுவலர் அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே சம்பந்தப்பட்ட கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் பின்வட்டி, பிற செலவுகளை கீழ்க் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்/களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடு வைக்கப்பட்ட ஆக்கபூர்வ (constructive) சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்துக்களை **12.01.2024** அன்று விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் **'எங்கு உள்ளதோ அதே நிலையில்' 'என்ன உள்ளதோ அதன்படி'** மற்றும் **'எப்படி உள்ளதோ அதே நிலையில்'** விற்கப்படும்.

கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி : **திரு. G.R.மகேந்திரர் ராஜ் மற்றும் திரு. B.ரங்கராஜன்,** எண்.18/12, காரட்டுப்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல் – 637207.
**30.09.2023** வரை நிலுவைத் தொகை : **ரூ.26,80,000/– (ரூபாய் இருபத்து ஆறு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)** மற்றும் வட்டி மற்றும் பிற செலவுகள்.

**அசையா சொத்து விவரம்**

சார் பிணையத்திற்குள்ளான நிலம் மற்றும் கட்டிடங்கள் அமைந்த, நாமக்கல் பதிவு மாவட்டம், பரமத்தி சார் பதிவு மாவட்டம், பரமத்திவேலூர், நத்தம் பழைய சர்வே எண்.222/ A1, **இனம்–1 :** உட்பிரிவிற்குப் பின்னர் புதிய சர்வே எண்.726/15 ல் உள்ள மொத்தம் 384 சதுரடி, இதில் சொத்து அமைந்த எல்லைகள் விபரம் : சங்கீதா வீட்டிற்கு வடக்கு, 2வது இனச் சொத்திற்குத் தெற்கு, அசன் ராவுத்தர் வீட்டுக்கு, பொதுச் சுவருக்குக் கிழக்கு, தென்வடல் பஞ்சாயத்து ரோட்டுக்கு மேற்கு. **இனம்–2 :** அதே கிராமம், நத்தம் பழைய சர்வே எண்.222/A1, உட்பிரிவிற்குப் பின்னர் சர்வே எண்.726/17A, 726/17B ல் உள்ள 924 சதுரடியில் சொத்தமைந்த எல்லைகள் விபரம் : இனம்–1 சொத்துக்கு வடக்கு, அன்பரசு வீட்டிற்குத் தெற்கு, லட்சுமண ஐயர் வீட்டிற்குக் கிழக்கு, தென்வடல் பஞ்சாயத்து ரோட்டுக்கு மேற்கு. **இனம்–3 :** அதே கிராமம், நத்தம் பழைய சர்வே எண்.222/A1, உட்பிரிவிற்குப் பின்னர் சர்வே எண்.726/17D ல் உள்ள 462 சதுரடியில் சொத்தமைந்த எல்லைகள் விபரம் : அன்பரசு வீட்டிற்கு வடக்கு, நாகராஜன் வீட்டிற்குத் தெற்கு, லட்சுமண ஐயர் வீட்டிற்குக் கிழக்கு, தென்வடல் பஞ்சாயத்து ரோட்டுக்கு மேற்கு.

**நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.26,87,000/-** **முன்வைப்புத் தொகை : ரூ.2,70,000/-**
**ஏல உயர்வு மடங்கு : ரூ.10,000/-**

**வங்கிக்குத் தெரிந்தவரை வில்லங்க விபரம் : இல்லை**

**மின் ஏல விற்பனை விவரம்**

**மின்–ஏலத் தேதி மற்றும் நேரம் : 12.01.2024 (வெள்ளிக்கிழமை); மதியம் 2.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை.** (ஏலம் தொடரும்பட்சத்தில் அது நிறைவு பெறும் வரைக்குமான 10 நிமிட அளவற்ற நீட்டிப்புகளுடன்)

**அதிகாரம் பெற்ற அலுவலர் முன் அனுமதியின் பேரில் சொத்தினை 27.12.2023 தேதி காலை 10.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை பார்வையிடலாம்.**

**EMD க்கான சான்று சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம் : 10.01.2024 (புதன்கிழமை)**

**முன்வைப்புத் தொகை (EMD) NEFT மூலமாக MSTC E-WALLET –ல் வரவு வைக்கப்பட வேண்டும். (இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள நிபந்தனை விபரங்களில் எண்.13-b ஐ பரிசீலிக்கவும்).**

இந்த ஏலமானது **https://www.mstcecommerce.com/auctionhome/ibapi/index.jsp.** இணையதளம் மூலமாக ஆன்லைனில் மட்டுமே நடத்தப்பெறும். **இதன் செயல்முறைகளுக்கு குறைந்தது இரண்டு முதல் மூன்று வேலை நாட்கள் எடுத்துக் கொள்ளப்படுவதால், ஏலதாரரின் பதிவு மின்–ஏலத் தேதிக்கு நன்கு முன்னதாக ஏலதாரரால் செய்து முடித்துக் கொண்டிருக்கப்பட வேண்டும்.**

மின்–ஏல விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு, மின்–ஏலத்தின் போர்டலில் பதிவு செய்து கொள்வதைத் தொடர்வதற்கு மற்றும் ஆன்லைன் மின்–ஏல விண்ணப்பப் படிவம், உறுதிமொழி முதலியவை அடங்கிய மின்–ஏல டெண்டர் ஆவணத்திற்கு, கீழ்க்கண்ட இணையதளங்களில் உள்ள 'லிங்க்'கினைப் பார்வையிடலாம். **https://ibapi.in & https://bank.sbi**

தேதி : 08.12.2023
இடம் : நாமக்கல்

அதிகாரம் பெற்ற அலுவலர்
பாரத ஸ்டேட் வங்கி
பரமத்திவேலூர் கிளை

## கடன் வசூல் தீர்ப்பாயம், கோவை.

**T.A. No. 238 / 2019**

பாரத ஸ்டேட் வங்கி,
ஸ்ரீரங்கபாளையம் கிளை,
சேலம் —வாதி

—எதிர்—

திரு.ஜெ.ஷிஜாய்,
த/பெ.ஜெயராமன்,
3/298, புதூர் இட்டேரி ரோடு,
கோயமுத்தூர் பை பாஸ் மேம்பாலம்
அருகில், சேலம். —பிரதிவாதி

**அறிவிப்பு**

வாதிக்கு வரவேண்டிய கடன் தொகையை வட்டி சகிதமாக வரப்பற்ற தங்கள் மீது வாதி தொடர்ந்த வழக்கு வருகின்ற **13.12.2023**ம் தேதி தங்கள் ஆஜர் ஆவதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் **காலை 10.30 மணி**யளவில், கோவை, பயணியர் மாளிகை சாலையில் கதவு எண்: 27ல் அமைந்துள்ள முன்னாள் இராணுவத்தினர் சேவை மையத்தின், 2 மற்றும் 3வது தளத்தில் அமைந்துள்ள கடன் வசூல் தீர்பாயத்தில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலம் ஆஜராகி ஆட்சேபனை இருந்தால் தெரிவித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு அன்றைய தினம் ஆஜராக தவறினால் தாங்கள் ஒருதலைபட்சமாக ஆக்கப்பட்டு மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எஸ்.ரெங்கசாமி, பி.ஏ., பி.எல்.,
அட்வகேட்

## ADITYA BIRLA CAPITAL — பாதுகாத்தல், நிதி முதலீட்டுக்கான ஆலோசனை கூறல்

**ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிட்டெட்**

**பதிவு அலுவலகம் :** இந்தியன் ரேயான் காம்பவுண்டு, வெரவல், குஜராத் – 362 266
**கிளை அலுவலகம் :** எண். 1/272/2, தரை தளம், கந்தஸ்வர்ண மெகா மால், ப்ளாக் B, சாராதா கல்லூரி சாலை, ஃபேர்லேண்ட்ஸ், சேலம் – 636 016

பிற்சேர்க்கை – IV – A
(பார்க்க – விதி 8(6) க்கான விதி விலக்கு)
**அசையா சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் – 2002 – உடன் படிக்க – பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 (2002 ம் வருடத்தின் 54 வது சட்டம்) ன் விதி 8 (6) க்கான விதி விலக்கு – ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், அவரவர் கடனுக்கான நிலுவைகளுக்கான ஜாமீனாக, ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்த, **ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிட்டெட்** – ன் அதிகாரப்பூர்வ அலுவலரால், 12.05.2022 அன்று இயற்சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், கடன்தாரர்கள் / கூட்டு கடன்தாரர்களான **M/s. ப்ரியங்கா டெக்ஸ்டைல்ஸ்., திரு. சக்திவேல் முருகன் P மற்றும் திருமதி. S சுப்புலட்சுமி** ஆகியோரிடமிருந்து ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு 11 ஜனவரி 2024 ம் தேதியின் படி வர வேண்டிய நிலுவைத்தொகை **ரூ. 1,39,51,079.72/– (ரூபாய். ஒரு கோடியே முப்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து எழுபத்து ஒன்பது மற்றும் பைசா எழுபத்து இரண்டு மட்டும்)** மற்றும் பணமாக்கப்படும் வரை வரும் பொருந்தத்தக்க வீதத்தில் அன்றாடம் சேர்ந்து வரும் வட்டி மற்றும் கட்டணங்கள் போன்றவற்றை வசூலிப்பதற்காக "'இருக்கின்ற இடத்தில்" மற்றும் "'இருக்கின்ற நிலையில்" மற்றும் "'இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் **28.11.2023** அன்று விற்பனை செய்யப்படும்.
**அடிப்படை விலை, டேவணித்தொகை ஆகியன கீழ்க்கண்டவாறு –**

| அசையா சொத்துக்களின் விபரம் | அடிப்படை விலை | டேவணித் தொகை (10%) |
|---|---|---|
| சேலம் மாவட்டம், சேலம் மேற்கு பதிவு மாவட்டம், எடப்பாடி சார் பதிவு மாவட்டம், எடப்பாடி தாலுக்கா, ஆவணிபேரூர் மேல்முகம் கிராமம், ஜலகண்டாபுரம் சாலை, K புதூர் அருகில், பழைய சர்வே எண். 478/1, புஞ்சை ஏக்கர் 9.42 க்கு தீர்வை ரூ, 14.70/– தற்போதைய மாத படி உட்பிரிவு சர்வே எண். 478/1A ல் உள்ள புஞ்சை ஹெக்டேர் 3.75.5, ஏக்கர் 9.27., க்கு தீர்வை ரூ. 14.50/–, இதில் வடபுறம் உள்ள சர்வே இடமானது வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டு T.P. & DDTP எண். 159/69 ன் படி அங்கீகரிக்கப்பட்டதில் உள்ள 4213 சதுர அடி பரப்பளவு கொண்ட ப்ளாட் எண். 29, மற்றும் அதில் உள்ள நகராட்சி கதவு எண். 1 M4 யைக்கொண்ட வீடு உள்ளிட்ட இந்த சொத்து விபரத்துடன் தொடர்புடைய சொத்து. இதன் எல்லைகள் மற்றும் அளவீடுகளாவன –கிழக்கு – தென்வடல் நகராட்சி சாலை, மேற்கு – நாகலட்சுமிக்கு சொந்தமான ப்ளாட் எண். 40, வடக்கு – S P நாகராஜனுக்கு சொந்தமான ப்ளாட் எண். 28, தெற்கு – கந்தசாமிக்கு சொந்தமான ப்ளாட் எண். 30., மேற்சொன்ன எல்லைகளுக்கு மத்தியில் உள்ள அளவீடுகளாவன – தென்வடல் கிழபுறம் – 40–1/4 அடி., மேற்கு புறம் – 40 அடி., கிழமேல் இருபுறமும் – 105 அடி., என மொத்தம் 4213 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் முழுவதும் மற்றும் அதனுடன் கூடிய RCC டெரஸ் கட்டிடம் மற்றும் அதனுடன் கூடிய பாதை உரிமைகள் மற்றும் இதர உரிமைகள் முழுவதும். இது, டவுன் சர்வே படி வார்டு – 3, ப்ளாக் – F, TS எண். 90 ல் எடப்பாடி நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. | ரூ. 1,02,00,448/– | ரூ. 10,20,044.80/– |

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவு கூர்ந்து ஜாமீன் பெற்று கடனளித்தவரின் வலைதளம் **https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx** அல்லது **https://sarfaesi.auctiontiger.net** யை பார்வையிடவும்.

தேதி : 08.12.2023
இடம் : சேலம்
LAN: ABFLSLMLAP0000140652

ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிட்டெட்
அதிகாரப்பூர்வ அலுவலர்
(9677317779)

## கனரா வங்கி Canara Bank — விற்பனை அறிவிப்பு

சிண்டிகேட் Syndicate

**கடன் வசூல் மேலாண்மைக் கிளை, கோயமுத்தூர்.**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, **கனரா வங்கி**யின் சம்பந்தப்பட்ட கிளையின், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கபூர்வ சுவாதீனம் செய்து கொள்ளப்பட்டது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைகளுக்காக **'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே'** மற்றும் **'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி'** என்கிற நிலையில் **30.12.2023** தேதியில் விற்பனை செய்யப்படுகிறது.

கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம் : **1. M/s. S D கோல்டு ஸ்டோரேஜ்,** 3/285, எண்.3, கொமாரபாளையம், மல்லூர் அஞ்சல், ராசிபுரம் தாலூகா, நாமக்கல் மாவட்டம் – 636203. **(2) திருமதி. S.ராஜலட்சுமி,** க/பெ. திரு. M சுப்ரமணியம், எண்.90, எண்.3, கொமாரபாளையம், மல்லூர் அஞ்சல், ராசிபுரம் தாலூகா, நாமக்கல் மாவட்டம் – 636203. **(3) திருமதி. சிந்தியா தேவி, லேட். சுப்ரமணியத்தின் சட்டபூர்வ வாரிசுதாரர்,** எண்.90, எண்.3, கொமாரபாளையம், மல்லூர் அஞ்சல், ராசிபுரம் தாலூகா, நாமக்கல் மாவட்டம் – 636203. **(4) திருமதி. தீபா, லேட். சுப்ரமணியத்தின் சட்டபூர்வ வாரிசுதாரர்,** எண்.90, எண்.3, கொமாரபாளையம், மல்லூர் அஞ்சல், ராசிபுரம் தாலூகா, நாமக்கல் மாவட்டம் – 636203. **(5) செல்வி. ஹர்ஷிதா, மைனர், பிரதிநிதியாக அவரது பாதுகாவலர் திருமதி. தீபா, லேட். சுப்ரமணியத்தின் சட்டபூர்வ வாரிசுதாரர்,** எண்.90, எண்.3, கொமாரபாளையம், மல்லூர் அஞ்சல், ராசிபுரம் தாலூகா, நாமக்கல் மாவட்டம் – 636203.
**30.11.2023 தேதி வரை நிலுவைத் தொகை : ரூ.15,92,52,323.43 (ரூபாய் பதினைந்து கோடியே தொண்ணூற்று இரண்டு லட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து முன்னூற்று இருபத்து மூன்று மற்றும் பைசா நாற்பத்து மூன்று மட்டும்)** மற்றும் வட்டி, பிற செலவுகள்.

சொத்துக்கள் விபரம் : **இனம் எண்.1 :** நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, கோனேரிப்பட்டி கிராமம், சர்வே எண்.23/1, உட்பிரிவின்படி டவுன் சர்வே எண்.54/1B, கதவு எண்கள் 154A, 156, 157, ராசிபுரம் டவுன் சர்வேயின்படி, வார்டு 22, அறிஞர் அண்ணா சாலை, வார்டு D, பிளாக் 8, பழைய வார்டு–17, இதிலமைந்த நிலம் மற்றும் கட்டிடம் கூடிய சொத்தான 0.1664 சதுர மீட்டர், இதில் கிழமேல் வடபுறம், கிழமேல் தென்புறம் 31 மீட்டர், தென்வடல் கிழபுறம் தெற்கிலிருந்து 37.2 மீட்டர், இங்கிருந்து சிறிது மேற்காக 2.6 மீட்டர், 2 மீட்டர், 5 மீட்டர், வடக்காக 11 மீட்டர், கிழக்காக 2.8 மீட்டர் மற்றும் வடக்காக 16 மீட்டர், தென்வடல் மேற்புறம் தெற்கிலிருந்து 7.5 மீட்டர், 1.4 மீட்டர், 24.5 மீட்டர் மேற்காக 0.6 மீட்டர், வடக்காக 12.8 மீட்டர், கிழக்காக 17.5 மீட்டர், வடக்காக 8.4 மீட்டர், 2.4 மீட்டர் மற்றும் 19.7 மீட்டர் நிலம் மொத்தம் 18,000 சதுரடி, கிராம நிர்வாக அதிகாரியின் சான்றின்படி 17,911 சதுரடி மற்றும் 12,031 சதுரடி கட்டிடம். எல்லைகள் விபரம் : R.K.சுப்ரமணியம் சொத்துக்கு கிராம நிர்வாக அதிகாரியின் சான்றின்படியான கிழமேல் சந்துக்கு வடக்கு, ருக்மணி, காஞ்சனா மற்றும் பிறரது சொத்துக்குக் கிழக்கு, கிழமேல் தார் சாலைக்கு – கிராம நிர்வாக அதிகாரியின் சான்றின்படி ஆத்தூர் மெயின் ரோடு – தெற்கு, ருக்மணி, காஞ்சனா மற்றும் பிறரது சொத்துக்கு – கிராம நிர்வாக அதிகாரியின் சான்றின்படி துரைசாமி மற்றும் பிறரின் சொத்து – மேற்கு. உரிமை ஆவணத்தில் சொல்லப்பட்டவாறான அனைத்து தடவழி உரிமைகள் மற்றும் பிற உரிமைகள் முதலியன சேர்ந்த சொத்து.
**நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.5,58,00,000/–** **முன்வைப்புத் தொகை : ரூ.55,80,000/–** **ஏல உயர்வு மடங்கு : ரூ.1,00,000/–**
**முன்வைப்புத் தொகை (EMD) செலுத்தக் கடைசி நாள் : 28.12.2023 மாலை 5.00 மணிக்கு முன்னதாக.**

**மின்-ஏலத் தேதி மற்றும் நேரம் : 30.12.2023**
**நேரம் : காலை 10.30 மணி முதல் காலை 11.30 மணி வரை.**
(ஒவ்வொன்றிற்கும் 5 நிமிட கால அளவிலான அளவற்ற நீட்டிப்புகளுடன் - விற்பனை நிறைவு பெறும் வரை)
**சொத்தினைப் பார்வையிடும் நாள் மற்றும் நேரம் : 27.12.2023; காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை**

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு மின்–ஏலத்தோடு தொடர்புடைய கனரா வங்கியின் இணையதளத்தின் **(www.canarabank.com)** 'லிங்க்'கில் அணுகவும். அல்லது **கனரா வங்கியின் கோயமுத்தூர், கடன் வசூல் மேலாண்மைக் கிளையின் முதன்மை மேலாளரை** எந்தவொரு வேலை நாளிலும், அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். **(போன் : 0422–2549459/ 2555655) மின்னஞ்சல் : cb4712@canarabank.com**
**மின் ஏலத்தின் தலைவாயில் (போர்டல்) : https://bankeauctions.com**

தேதி : 02.12.2023
இடம் : கோயமுத்தூர்

அதிகாரபூர்வ அதிகாரி
கனரா வங்கி

## KVB கரூர் வைஸ்யா பேங்க் — சுவாதீன அறிவிப்பு

Smart way to bank

தி கரூர் வைஸ்யா பேங்க் லிட்.
Asset Recovery Branch
எண்.1498-C, KVB டவர்ஸ், 3வது தளம்
அவினாசி ரோடு, பீளமேடு, கோயமுத்தூர்–641 004

(அசையா சொத்திற்காக)
**பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள், 2002ன் விதி 8(1)ன் கீழ் வழங்கப்பட்டது**

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை பத்திரப்படுத்துதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்ட ஷரத்துக்களின்படி (சட்டம் 54/2002) பிரிவு 13(12)ன் கீழ் மற்றும் விதி 3 பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள் 2002ன் படியும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் கீழே கையொப்பம் செய்துள்ள, **கரூர் வைஸ்யா பேங்க் லிட்–ன்** அதிகாரபூர்வமான அலுவலரால் இவ்வங்கியிலிருந்து **கடன்பெற்றவர் : 1) M/s. சேலம் மாவட்ட சர்வோதய சங்கம்** (தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றது, பதிவு எண்.98/1961), பிரதிநிதியாக அதன் செயலாளர், தலைமை அலுவலகம் : பாரதிபுரம், தாண்டவராயபுரம் அஞ்சல், ஆத்தூர் – 636 108 **(கடன்தாரர்), 2) தலைவர்,** M/s. சேலம் மாவட்ட சர்வோதய சங்கம், பாரதிபுரம், தாண்டவராயபுரம் அஞ்சல், ஆத்தூர் – 636 108, **3) செயலாளர்,** M/s. சேலம் மாவட்ட சர்வோதய சங்கம், பாரதிபுரம், தாண்டவராயபுரம் அஞ்சல், ஆத்தூர் – 636 108, **4) பொருளாளர்,** M/s. சேலம் மாவட்ட சர்வோதயா சங்கம், பாரதிபுரம், தாண்டவராயபுரம் அஞ்சல், ஆத்தூர் – 636 108 (எண்.2 முதல் 4 வரையில் உள்ளவர்கள் சங்க அலுவலக அலுவலர்கள்), **5) இயக்குநர், காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையம்,** மாநில அலுவலகம் : எண்.326, அவ்வை சண்முகம் சாலை, கோபாலபுரம், சென்னை – 600086 (MOTDன் உறுதி செய்துள்ளவர்) பெற்றுள்ள **19.09.2023** தேதியிட்ட நோட்டீஸில் சொல்லப்பட்டுள்ள **ரூ.1,06,79,652.61 (ரூபாய் ஒரு கோடியே ஆறு லட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று ஐம்பத்து இரண்டு மற்றும் பைசா அறுபத்து ஒன்று மட்டும்) 31.08.2023** தேதி வரை + பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன் கூட்டாக மற்றும் தனியாக நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தக் கோரி நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

கடன்பெற்றவர் மேற்கூறிய தொகையைச் செலுத்தத் தவறி விட்டதால், கடன்பெற்றவர் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், 2002 சர்பாசி சட்டப் பிரிவு 13(4) மற்றும் பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள் 2002ன் விதி 8–ன் கீழ் அங்கீகாரம் பெற்ற அதிகாரி அவருக்குள்ள அதிகாரத்தின்படி, கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை **06.12.2023** தேதியில் சுவாதீனம் செய்து கொண்டுவிட்டார்.

குறிப்பாக கடனாளி மற்றும் பொதுமக்கள் இந்த சொத்து சம்பந்தமாக எந்தவித பேரங்களும் மேற்கொள்ள வேண்டாமென்றும், அப்படி ஏதாவது ஒப்பந்தங்களில் ஈடுபட்டால் அவை **கரூர் வைஸ்யா பேங்க் லிட்.–**ஐக் கட்டுப்படுத்தாது எனவும், மேலும் வங்கிக்கு சேரவேண்டிய, **30.11.2023** தேதி அன்று **ரூ.1,11,32,775.61 (ரூபாய் ஒரு கோடியே பதினோரு லட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து எழுநூற்று எழுபத்து ஐந்து மற்றும் பைசா அறுபத்து ஒன்று மட்டும்)** மற்றும் பின்வட்டி, செலவு மற்றும் கட்டணங்களும் சேர்ந்த, மீதமுள்ள தொகைக்கு கட்டுப்படுத்துவதாக இருக்குமென்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்.

பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதில் கிடைக்கும் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளுமாறு சட்டப்பிரிவு 13(8)ன் நிபந்தனைகளுக்கு கடன் வாங்கியவரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

**அசையாச் சொத்து விபரம் :**

**சொத்து–1 :** சேலம் பதிவு மாவட்டம், ஆத்தூர் சார் பதிவு மாவட்டம், ஆத்தூர் தாலூகா, அரகலூர் கிராமம், சர்வே எண்.73/14 ல் உள்ள 7786 சதுரடி நிலம் மற்றும் கட்டிடத்தின் எல்லைகள் விபரம் : நாயக்கரின் சொத்துக்களுக்கு வடக்கு, கிழமேல் கடைவீதி தெருவிற்குத் தெற்கு, சடையனின் சொத்துக்களுக்குக் கிழக்கு, ஆதி திராவிடர் காலனிக்கு மற்றும் அம்பாயி அம்மாளின் சொத்துக்களுக்கு மேற்கு. அளவுகள் : **பகுதி–1 :** கிழமேல் 43 அடி மற்றும் தென்வடல் 53½ அடி, மொத்தம் 2300½ சதுரடி; **பகுதி–2 :** கிழமேல் 33 அடி மற்றும் தென்வடல் 33 அடி, மொத்தம் 1089 சதுரடி; **பகுதி–3 :** கிழமேல் 39 அடி மற்றும் தென்வடல் 26 அடி, மொத்தம் 1014 சதுரடி; **பகுதி–4 :** கிழமேல் 61½ அடி மற்றும் தென்வடல் 55 அடி, மொத்தம் 3382½ சதுரடி. நான்கு பகுதிகளுமாகச் சேர்ந்த மொத்தம் 7786 சதுரடி நிலம், அங்குள்ள கட்டுமானங்களுடன், கதவுகள், சன்னல்கள், பொருத்தியவைகள் மற்றும் அங்குள்ள சிறப்பம்சங்களுடன், பொது வழித்தட உபயோக உரிமைகளுடன் மற்றும் அனைத்துப் பிற வசதிகள் மற்றும் அங்குள்ள பாத்தியதைகளுடன்.

**சொத்து–2 :** சேலம் பதிவு மாவட்டம், ஆத்தூர் சார் பதிவு மாவட்டம், ஆத்தூர் தாலூகா, நரசிங்கபுரம் கிராமம்,

| வ. எண். | பழைய சர்வே எண்கள் | பரப்பு | புதிய சர்வே எண்கள் | பரப்பு | எல்லைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | 26/4 | 0.29 ஏக்கர் | 26/1 | 4.15 ஏக்கர் | ஓடைக்குத் தெற்கு, மருதை உடையார் சொத்திற்கு மேற்கு, ஆத்தூர்–ராசிபுரம் ரோட்டுக்கு வடக்கு, சென்றாய நாய்க்கரின் நிலங்களுக்குக் கிழக்கு. |
| 2. | 26/1 | 0.50 ஏக்கர் | | | |
| 3. | 26/4 | 1.95 ஏக்கர் | | | |
| 4. | 26/5 | 0.07 ஏக்கர் | | | |
| 5. | 26/6B | 0.72 ஏக்கர் | | | |
| 6. | 26/8 | 0.28 ஏக்கர் | | | |
| 7. | 26/9 | 0.05 ஏக்கர் | | | |
| 8. | 26 / 10 | 0.40 ஏக்கர் | | | |
| 9. | 27/2 | 2.10 ஏக்கர் | 27/2A | 2.59 ஏக்கர் | |
| 10. | 27/3 | 0.50 ஏக்கர் | | | |
| 11. | 26/7 | 0.01 ஏக்கர் | | | |
| | **மொத்தம்** | **6.86 ஏக்கர்** | **மொத்தம்** | **6.74 ஏக்கர் சட்டக் கருத்துச் சொத்துக்களாக எடுக்கப்பட உள்ளது.** | அனைத்து சிறப்புக் கட்டுமானங்களுடன், அங்குள்ள அனைத்துப் பொருத்தியவைகளுடன், அனைத்து அவசியமான வசதிகள் மற்றும் அங்குள்ள பிற உரிமைகளுடன். |

இடம் : கோயமுத்தூர்
தேதி : 06.12.2023

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
தி கரூர் வைஸ்யா பேங்க் லிட்.